## <u>சுருக்கம்</u>

பணியமைப்பு – சில சிறப்பு நிலை நகராட்சி ஆணையர்களை இணை இயக்குநர்களாக நிலை உயர்த்தி பணியமர்த்தவும், சில இணை இயக்குநர்களை பணிமாறுதல் செய்தும் ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சிநிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (நப.1) துறை

**அரசாணை (பத்தாண்டு) எண்.377** **நாள்: 20.08.2009.**

படிக்க:

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் நேர்முக கடிதம் எண்.37214/ 2009/C1, நாள் 07.08.2009 மற்றும் 12.08.2009.

----

**<u>ஆணை:–</u>**

பார்வையில் படிக்கப்பட்ட நகராட்சி நிர்வாக இயக்குநரின் பரிந்துரையை ஏற்று, கீழ்கண்ட மண்டல நிர்வாக இயக்குநர்களை பணிநியமனம் மற்றும் பணிமாறுதல் செய்து ஆணையிடப்படுகிறது:–

1) திண்டுக்கல் நகராட்சி ஆணையராக பணிபுரியும் திருமதி S. சாந்தி அவர்களை பணிநியமன அடிப்படையில் (working arrangement basis) இணை இயக்குநராக நிலை உயர்த்தி தஞ்சாவூர் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநராக திரு P.S. சௌந்தரராஜன் அவர்களுக்கு பதிலாக நியமனம் செய்யப்படுகிறார்.
2) நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தில் பொது மேலாளராக (சீர்திருத்தம்) பணிபுரியும் திருமதி Z. மெகபூபா அவர்களை பணிநியமன அடிப்படையில் (working arrangement basis) இணை இயக்குநராக நிலை உயர்த்தி அவ்வலுவலகத்தில் காலியாக உள்ள இணை இயக்குநர் (மாநகராட்சிகள்) பணியிடத்தில் நியமனம் செய்யப்படுகிறார்.
3) பொள்ளாச்சி நகராட்சி ஆணையராக பணிபுரியும் திரு K.R. செல்வராஜ் அவர்களை பணிநியமன அடிப்படையில் (working arrangement basis)இணை இயக்குநராக நிலை உயர்த்தி வேலூர் மாநகராட்சி ஆணையர், திரு P. குபேந்திரன் அவர்களுக்கு பதிலாக நியமனம் செய்யப்படுகிறார்.
4) வேலூர் மாநகராட்சி ஆணையர், திரு P. குபேந்திரன் அவர்களை பணிநியமன அடிப்படையில் (working arrangement basis) இணை இயக்குநராக நிலை உயர்த்தி தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர், திருமதி R. இலட்சுமி அவர்களுக்கு பதிலாக நியமனம் செய்யப்படுகிறார்.
5) திருநெல்வேலி மாநகராட்சி ஆணையராகப் பணிபுரியும் திரு T. மோகன் அவர்களை காலியாக உள்ள திருநெல்வேலி மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் பணியிடத்தில் பணிமாறுதல் செய்யப்படுகிறார்.

6) தஞ்சாவூர் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநராக பணிபுரியும் திரு P.S. சௌந்தரராஜன் அவர்களை மாநில தேர்தல் ஆணையத்தில் காலியாக உள்ள முதன்மை தேர்தல் அலுவலர் பணியிடத்தில் பணிமாறுதல் செய்யப்படுகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**நிரஞ்சன் மார்டி**
**அரசுச் செயலாளர்**

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை – 600 005.
தனியர்கள், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை – 5 வழியாக.
மாநில கணக்காயர், சென்னை – 600 018 / மாநில தேர்தல் ஆணையர், சென்னை.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, குறளகம், சென்னை– 108.
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியாளர்கள்.
தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோவை.
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்.

நகல்:-
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் செயலர் அவர்களின் தனிச் செயலர், சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநமு.2) துறை, சென்னை – 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.